டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

Agridoctor.in | 22.03.2025 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 227 - Madurai | Online Edition

# விளைபொருட்களின் சேமிப்பு கிடங்கு வசதிகளுக்கு மானியம்

புது தில்லி, மார்ச் 21

விவசாயிகளுக்கு சேமிப்பு கிடங்கு மானியம் வழங்கும் பல்வேறு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தூர்தர்சன், அகில இந்திய வானொலி மூலம் வெகுஜன ஊடக ஆதரவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 18 மண்டல தூர்தர்ன் மையங்கள் மூலம் வாரத்தில் மூன்று நாட்கள் 30 நிமிட நிகழ்ச்சி ஒளிபரப்பப் படுகிறது.



அகில இந்திய வானொலியில், இரண்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன.

மேலும் விவசாயிகளின் நலனுக்காக தேசிய மற்றும் மண்டல அளவில் செயல்படும் தனியார் தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகள் மூலம் ஒலி–ஒளி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. நாடு முழுவதும் உள்ள முன்னணி செய்தித்தாள்களில் விளம்பரங்கள் மூலம் விழிப்புணர்வு மேற் கொள்ளப்படுகிறது. கிராமப்புறங்களில் மொபைல் மற்றும் இணைய பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடக தளங்களும் விளம்பரம் மற்றும் விழிப்புணர்வுக்காக பயன்படுத்தப்படுகின்றன.




வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை நாட்டில் தோட்டக் கலையின் முழுமையான வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குறைந்த விலை வெங்காய சேமிப்பு கட்டமைப்புக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ.1.75 லட்சம் மொத்த செலவில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

இத்தகவலை மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர் ராம்நாத் தாக்கூர் தெரிவித்து உள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# உர விற்பனை நிலையங்களுக்கு வேளாண்மை இணை இயக்குநர் எச்சரிக்கை

விருதுநகர், மார்ச் 21

விருதுநகர் மாவட்டத்தில் 203 தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் 179 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

தற்போது யூரியா 3089 டன், டி.ஏ.பி 805 டன், பொட்டாஷ் 532 டன், காம்ப்ளக்ஸ் உரங்கள் 1951 டன் விவசாயிகளின் தேவைக்காக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தற்போது வேளாண் விளைப்பொருட்கள் சாகுபடிக்கு தேவையான உரங்கள் போதிய அளவில் இருப்பு உள்ளது.




மாவட்டத்திலுள்ள உர விற்பனை நிலையங்களில் உர மாதிரிகள் சேகரம் செய்யப்பட்டு பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பகுப்பாய்வில் தரமற்ற உரம் என தெரிய வரும் பொழுது உரக் கட்டுப்பாட்டு சட்டம் 1985ன்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொடர்ந்து தரமற்ற உரங்களை விற்பனை செய்யும் உர விற்பனை நிலையங்களின் உர உரிமம் இரத்து செய்யப்படும். தரமற்ற உரங்களை உற்பத்தி செய்யும் உர நிறுவனங்களின் மீது உரக்கட்டுப்பாட்டு சட்டம் 1985ன்படி உர உற்பத்தி உரிமம் இரத்து செய்திட பரிந்துரை செய்யப்படும் என எச்சரிக்கை செய்யப்படுகிறது.

மேலும் அந்நிறுவனத்தின் உரங்கள் ஏதும் விருதுநகர் மாவட்டத்தில் விற்பனை செய்திட தடை விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கப்படுகிறது. மேலும், விவசாயிகள் உரம் விற்பனை தொடர்பான புகார்களை அந்தந்த பகுதிகளுக்கான வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடம் விவசாயிகள் தெரிவிக்கலாம் என விருதுநகர் வேளாண்மை இணை இயக்குநர் தெரிவிக்கிறார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# 'பூஜ்ஜிய ஆற்றல் குளிர் அறைகள்' பற்றி விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



கடலூர், மார்ச்21

கடலூர் மாவட்டம், திருவெறும்பூர், காட்டூர், மஞ்சழ்த்திடல் கிராமத்தில் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழக மாணவிகள் அபிநயா, ஆன்டன் பவுலின் மேரி, தாரிணி, ஹரித்தா, ஜோதி பிரியா, கிருத்திகா, லாவண்யா, பிரித்திகா, ரம்யா, செந்தமிழ்சுடர், சுவேதா, விஜயலட்சுமி ஆகியோர் 'பூஜ்ஜிய ஆற்றல் குளிர் அறைகள்' பற்றி கிராம மக்களுக்கு விளக்கினர்.

பூஜ்ஜிய ஆற்றல் குளிர் அறைகள் என்பது ஒரு வகை ஆவியாக் கும் குளிரூட்டியாகும், இவை மின்சாரத்தைப் பயன்படுத்தாமல் காய்கறிகளை புதியதாக வைத்திருக்க எளிய மற்றும் மலிவான வழிகள். ஒரு மேற்பரப்பில் இருந்து நீர் ஆவியாதல் வெப்பத்தை நீக்கி, குளிரூட்டும் விளைவை உருவாக்குகிறது இதன் நன்மைகள், திறமையற்ற ஒருவரால் கட்டமைக்க முடியும். இயந்திர அல்லது மின்சார ஆற்றல் தேவையில்லை, வீட்டு சேமிப்பிற்கு ஏற்றது. சிறு விவசாயிகள் சில நாட்களுக்கு விளை பொருட்களை சேமித்து வைக்க அனுமதிக்கிறது. இதனால் விலையுயர்ந்த விற்பனையைத் தவிர்க்கிறது.

# கிராமபுற பணி அனுபவத்திட்டத்தின் மூலம் ஊரக பங்கேற்பு மதிப்பீடு



மதுரை, மார்ச் 21

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரமோகன் வழிகாட்டுதலின் பெயரில் மதுரை வேளாண்மை கல்லூரியை சேர்ந்த இறுதியாண்டு மாணவர்கள் தங்கதுரை கிராமப்புற வேளாண்மை பணி அனுபவ திட்டத்தின் கீழ் பலக்கநுத்து கிராமத்திற்கு சென்று பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடும் மூலம் கிராமத்தின் வரைபடம் வரிசை பயணம் பருவ கால நாட்காட்டி மற்றும் காலக்கோடு போன்றவற்றை வரைந்த கிராமத்தின் வளங்கள் வரலாறு பயிர் சாகுபடி மற்றும் விவசாயிகளின் குறைகளை கேட்டு அறிந்தனர்.

# மரவள்ளியில் தேமல் நோய் எதிர்ப்பு திறன் கொண்ட புதிய இரகமான ஸ்ரீரக் ஷா செயல்விளக்கம்



கன்னியாகுமரி, மார்ச் 21

கன்னியாகுமரி மாவட்டத்தில் மரவள்ளி ஒரு முக்கிய பயிராக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இப்பயிரில் தேமல் நோய் ஒரு பிரச்சினையாகவே இருந்து வந்தது. இந்நோயினால் மகசூல் 10 முதல் 20 சதவீதம் அளவு குறைந்து காணப்பட்டது. இதனை கருத்தில் கொண்டு திருப்பதி சாரம் வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் திருவனந்த புரத்தில் உள்ள மத்திய கிழக்கு வகை பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தால் வெளியிடப்பட்ட தேமல் நோய் எதிர்ப்பு திறன் கொண்ட புதிய இரகமான ஸ்ரீரக் ஷா வினை கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயிகளின் வயல்களில் முதல்நிலை செயல் விளக்கம் மேற்கொள்ளப்பட்டது. இச்செயல்விளக்கத்தினை வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வந்தனர்.

இப்பயிர் அறுவடை நிலையை எட்டிய நிலையில் தோவளை வட்டார கிராமத்தில் உள்ள நாகமுத்துவின் தோட்டத்தில் 20.3.25 அன்று வயல் விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சா சுரேஷ், இணை பேராசிரியர் முனைவர் கு.கவிதா, உதவி பேராசிரியர் முனைவர் செல்வி கலந்து கொண்டனர்.

வயல்விழாவில் மரவள்ளி ரகம் ஸ்ரீரக் ஷா அறுவடை செய்யப் பட்டு மகசூல் கணக்கிடப்பட்டது. ஒரு மரவள்ளி செடியில் இருந்து 8 முதல் 12 கிலோ எடை கிழங்கு கிடைக்கப்பெற்றது. ஒரு ஏக்கரின் மொத்த மகசூல் சராசரி 35-38 டன் ஆக கணக்கிடப் பட்டது. இந்த மரவள்ளி ரகத்தின் வயது பத்து மாதங்கள் ஆகும். இவ்வயல் விழாவில் தோவளை வட்டாரத்தில் உள்ள 20 விவசாயிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். வயல் விழாவில் கலந்து கொண்ட விவசாயிகள் இந்த மரவள்ளி இரகத்தினை சாகுபடி செய்ய ஆர்வம் தெரிவித்துள்ளனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# முதலிப்பட்டி கிராம விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து விழிப்புணர்வு



திருச்சி, மார்ச் 21

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், நவீன தொழில்நுட்பங்கள் செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக 20-3-25ல் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு தொட்டியத்தில் உள்ள முதலிப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது. ஒருங்கிணைந்த பண்ணையம் என்பது விவசாயிகள் பயிர் சாகுபடியுடன் பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, பழ மர வளர்ப்பு ,தேனீ வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் உற்பத்தி போன்ற துணை நடவடிக் கைகளை இணைத்து தங்கள் விவசாய நடைமுறைகளை பன்முகப்படுத்துவதாகும்.

ஒருங்கிணைந்த வேளாண்மை அமைப்புகள் (IFS) அதிகரித்த உற்பத்தித்திறன், பன்முகப்படுத்தப்பட்ட வருமான வழிகள், மேம்பட்ட மண் ஆரோக்கியம், குறைக்கப்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் மேம்பட்ட பண்ணை மீள்தன்மை உள்ளிட்ட பல நன்மைகளை வழங்குகின்றன. இது விவசாயத்திற்கு நிலையான மற்றும் பொருளாதார ரீதியாக சாத்தியமான அணுகுமுறையாக அமைகிறது. இந்நிகழ்ச்சியை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு ஒருங்கிணைத்து விவசாயிகளுக்கு வேளாண்மை ஒருங்கிணைந்த விவசாய முறையை சிறப்பாக விளக்கினார். முதலிப்பட்டி விவசாயிகளுக்கு இம்முறையை குறித்த முன்னுரையை பேராசிரியர் முனைவர் ஜானகி வழங்கினார்.

மேலும் இந்நிகழ்வில் சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத்தில் களப்பயிற்சி மேற்கொள்ளும் தஞ்சை எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மை கல்லூரி மாணவிகள் மதிவர்ஷினி, மகாசுவேதா இம்முறையின் பயன்களை விவசாயிகளுக்கு தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்று பயன் பெற்றனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 11வது விதை கருத்தரங்கு

கோயம்புத்தூர், மார்ச் 21

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விதை மையம் சார்பாக, 11வது விதை கருத்தரங்கு 20.03.25 அன்று விதை மையத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில், 80-க்கும் மேற் பட்ட வேளாண் விஞ்ஞானிகள் கலந்து கொண்டு 2025-26 ஆம் ஆண்டிற்கான விதை உற்பத்தி திட்டத்தை வரையறை செய்தார்கள். இந்த கருத்தரங்கில், விதை மைய இயக்குநர் முனைவர் ர. உமாராணி வரவேற்புரை நல்கினார்.



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் வே.கீதாலட்சுமி தனது, தலைமையுரையில் பல்கலைக்கழகத்தின் விதை உற்பத்தி விதை மையம் துவங்கிய பிறகு நான்கு மடங்கு அதிகரித்துள்ளது என்று தெரிவித்தார். மேலும் அவர் பல்வேறு பயிர் இரகங்களின் விதை இருப்பு குறித்த விபரங்களை வழங்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை இருப்பு வலைதளத்தை உருவாக் கியதற்காக வேளாண் பல்கலைக்கழகத்தின் விதை விஞ்ஞானி களை பாராட்டினார். பல்வேறு பயிர் இரகங்களின் தரமான விதைகளை உரிய நேரத்தில் கொள்முதல் செய்வதற்கு விதை மையம் உருவாக்கியுள்ள இந்த வலைதளம் மிகவும் பயனுள்ள தாக இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், தேசிய விதைக் கழகமும்

மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தரமான இடுபொருட் களான விதைகள், மரக்கன்றுகள், விதை பூச்சு கலவைகள், உயிர் உரங்கள், உயிரி பூச்சிக்கொல்லிகள், நுண்ணூட்டச் சத்துக்கள், பயிர் பூஸ்டர்கள் போன்றவைகள் தேசிய அளவில் விவசாயிகளுக்கு கிடைப்பதை மேம்படுத்த வழிவகுக்கும் என்று கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மைய இயக்குநர் முனைவர் இரா. ரவிகேசவன், புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் சிறப்பியல்புகள், பயிர் உற்பத்தித்திறன் மற்றும் விதை மகசூலில் பருவநிலை மாற்றத்தின் தாக்கம், விதை விநியோகச் சங்கிலியில் கரு விதைகளின் இனத்தூய்மை பராமரிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.




தேசிய விதைக் கழகத்தின் மண்டல மேலாளர் ஜெ.செல் வேந்திரன் வேளாண் பல்கலைக்கழகத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, வேளாண் பல்கலைக்கழகத்தின் விதை உள்ளிட்ட அனைத்து இடுபொருட்களையும் நாட்டின் பல்வேறு பகுதியில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் இந்நிறுவனம் செயலாற்றும் என்று கூறுனார். தேசிய விதைக் கழகத்தின் முன்னாள் பொது மேலாளர் முனைவர் வி.சங்கரன், வேளாண் உற்பத்தியை உறுதி செய்வதில் ஆதார விதை மற்றும் சான்றுநிலை விதைகளின் பங்கை எடுத்துரைத்தார். மேலும் அவர் வேளாண் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பத்தை தேசிய விதைக் கழகத்தின் விதை உற்பத்தி பண்ணைகளில் பயன்படுத்துவதின் மூலம் விதை உற்பத்தியை மேம்படுத்த இயலும் என்று கூறினார். இறுதியாக, விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வே.மனோன்மணி நன்றியுரை கூறினார்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 21.03.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 14 | 18 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 14 | 18 | 57 | உருளை (பிற) | 20 | 30 |
| 1B | கத்திரி(Nadu) | 20 | 25 | 57A | உருளை(ஊட்டி) | 40 | 50 |
| 2 | வெண்டை | 34 | 38 | 58 | மேரக்காய் | 18 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 10 | 12 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 25 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 10 | 13 | 60 | கேரட் | 32 | 40 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 50 | 54 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 30 | 40 |
| 6 | புடலை | 40 | 46 | 62 | நூல்கோல் | 20 | 24 |
| 7 | பீர்க்கன் | 34 | 38 | 63 | டர்னிப் | 30 | 35 |
| 8 | சுரைக்காய் | 14 | 18 | 64 | மு.கோஸ் | 14 | 18 |
| 9 | பாகற்காய் | 28 | 32 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 30 | 34 | 66 | காளிபிளவர் | 28 | 33 |
| 11 | பூசணி | 12 | 15 | 67 | பட்டாணி | 70 | 76 |
| 12 | அரசாணி | 10 | 14 | 68 | பூண்டு | 80 | 100 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 18 | 22 | 69 | இஞ்சி | 40 | 50 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 20 | 24 | 70 | புருக்கோலின் | 90 | 100 |
| 15 | சி.வெங்காயம் | 25 | 30 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 65 |
| 16 | பெ.வெங்காயம் | 22 | 27 | 72 | குடமிளகாய் | 40 | 46 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 20 | 26 | 73 | பட்டர் பீன்ஸ் | 100 | 110 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 54 | | | | |
| 19 | முருங்கை | 28 | 33 | | | | |
| 20 | தேங்காய் | 58 | 62 | | | | |
| 21 | மாங்காய் | 40 | 65 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 50 | | | | |
| 24 | கருணைக்கிழங்கு | 58 | 62 | 75 | எலுமிச்சை | 60 | 70 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 30 | 38 | 78 | பப்பாளி | 35 | 42 |
| 28 | கறிவேப்பிலை | 60 | 65 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 120 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 80 | 100 |
| 33 | சுக்கிட்டிக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 58 |
| 35 | சிறுகீரை/பாலாக்கு | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 24 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 18 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 40 | 50 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 60 | 70 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 40 | 45 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 58 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 40 | 45 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 16 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 22 | 26 | 96 | நேந்திரன் | 60 | 64 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 15 | 18 | 97 | செவ்வாழை | 80 | 90 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 16 | 20 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 60 | 68 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 28 | 102 | நெல்லிக்காய் | 60 | 70 |
| 52 | புளி | 0 | 0 | 103 | Seedless திராட்சை(பக) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 32 | 36 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 32 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 20 | 24 | | | | |


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின் தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம் குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# வேளாண் பட்ஜெட் 25-26 ஓரு பார்வை




கடந்த 4 ஆண்டுகளாக தமிழகத்தில் வேளாண்மைக்கென தனிநிதி நிலை அறிக்கை (AGRI BUDGET) தாக்கல் செய்யப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்ற நிலையில் இந்த நிதியாண்டிற்கான பட்ஜெட்யை வேளாண் துறை அமைச்சர் M.R.K.பன்னீர் செல்வம் கடந்த 15.3.25 தாக்கல் செய்துள்ள நிலையில் ஒவ்வொரு துறை வாரியாக பட்ஜெட்டின் சாதக, பாதகங்களை விரிவாக பார்ப்போம்.

### 1) முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள்

வேளாண்மை செழித்திட உதவும் வகையில் 1000 முதல் அமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் 30% மானி யத்தில், வேளாண் பட்டதாரிகள் மற்றும் பட்டயதார்களுக்கு வழங்கப்படும். விதை உரங்கள் உள்ளிட்ட இடுபொருள் விற்பனை செய்வதுடன் பயிர் சாகுபடிக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும்.




### 2) உழவரை தேடி வேளாண்மை துறை

வேளாண்மை துறையின் கீழ் இயங்கி வரும் அனைத்து சகோதர துறைகளின் ஒத்துழைப்புடன் மாதம் இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட வருவாய் கிராமங்களில் முகாம் நடத்தப்படும். ஓராண்டிற்குள் மொத்த வருவாய் கிராமங்களில் (17, 116) இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 3) முதலைமச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்

இந்த திட்டத்தில் உள்ள 15 வகையான திட்டக்கூறுகள் (பசுந்தாள் விதை உர வினியோம், மண் வள அட்டை ஒருங் கிணைந்த பண்ணையம் பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம்) போன்றவற்றிற்கு 142 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**4) மானாவாரி நிலங்களில் கோடை உழவு**

3 லட்சம் ஏக்கர் பரப்பளவில் கோடை உழவு செய்திட, எக்டருக்கு 2000 ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

**5) உணவு தானிய உற்பத்தி அதிகரிக்க சிறப்புத் தொகுப்பு திட்டம்**

உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க டெல்டா அல்லாத மாவட்டங்களில், சிறப்பு தொகுப்பாக (நெல் இயந்திர நடவு மானியம், தரமான சான்று பெற்ற, விதைகளுக்கு) 102 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. குறுவை பட்டத்தில் டெல்டா மாவட் டங்களில், சிறப்பு தொகுப்பாக 58 கோடி நிதி ஓதுக்கிடு. இதனால் சாகுபடி பரப்பு அதிகரிப்பதுடன் உற்பத்தியும் கூடுதலாக வரும்.

**6) மலை வாழ் உழவர் முன்னேற்ற திட்டம்**

சுமாராக 63 ஆயிரம் மலை வாழ் உழவர்கள் பயனடையும் வகையில், 22 கோடியே 80 லட்சத்தில் சாகுபடி விரிவாக்க செய்திட நிதி ஓதுக்கிடு 20 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். இதில் விருதுநகர் மாவட்டமும் ஒன்று.

7) கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் (KAVIADP). கடந்த 40 ஆண்டு களாக 10187 கிராம ஊராட்சியில் வெற்றிகரமாக செயல் பட்டதை தொடர்ந்து மீதமுள்ள 2338 கிராம ஊராட்சியில் 269 கோடியே 50 லட்சம் ரூபாய் மாநில நிதி (STATE FUND) ஓதுக்கிட்டில், 9 லட்சத்து 36 ஆயிரம் உழவர்கள் பயனடையும் வகையில் செயல்படுத்தப்படும்.

**8) மக்காசோள உற்பத்தி திட்டம்**

இந்த திட்டத்தில் 1,87,000 ஏக்கர் பரப்பளவில், 79,000 விவசாயிகள் பயனடையும் வகையில் 40 கோடியே 27 லட்சம் நிதி (ஒன்றிய, மாநில) நிதி ஓதுக்கிடு செய்யப்படும்.

**9) சிறுதானிய இயக்கம்**

இந்த இயக்கமானது 2023-24 யில் தொடங்கி, ஐந்தாண்டுத் திட்டமாக அறிவிக்கப்பட்டு, அனைத்து துறைகளின் ஒத்துழைப் புடன் (உழவர் குழுக்கள் மானியம் வழங்குதல்) போன்ற திட்டக்கூறுகளோடு 52 கோடியே 44 லட்சம் ரூபாய் (ஒன்றிய மாநில) பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.

**10) ஆதி திராவிட, பழங்குடியின சிறு/குறு உழவர்களுக்கான கூடுதலான மானியம்**

இந்த வகுப்பை சார்ந்த உழவர்களுக்கு உதவிடும் வகையில் நடைமுறையிலுள்ள மானியத்திற்கு (40% முதல் 50% வரை) பதிலாக 60% முதல் 70% வரை மானியம் (பண்ணை இயந்திரம் சூரிய சக்தி உபகரணங்கள் வாங்கிட) கூடுதலான நிதி மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படும். இதற்காக 21 கோடி ஒதுக்கீடு. ஏகப்பட்ட நலத்திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. வேளாண் விவசாயிகள் தங்களுடைய தேவைக்கேற்ப வாங்கி பயனடையுங்கள். உணவு உற்பத்தியில் சாதனை படைக்க வேண்டுகிறோம்.

நாளை தோட்டக்கலைத்துறை பற்றி பார்ப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பரமக்குடி அருகே விவசாயிகளுக்கு செயல் விளக்கப்பயிற்சி



இராமநாதபுரம், மார்ச் 20

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அருகே உள்ள மேலப்பெருங்கரை கிராமத்தில் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி மேற் கொண்டு வருகின்றனர். அதனடிப் படையில் நேற்று மாணவர்கள் ஊர் பொது மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடிக்கு ஏற்ற வேளாண் இயந்திர வாடகை மையம் அமைத்தல் மற்றும் முட்டை கரைசல் மூலம் மகசூல் அதிகரிக்கும் முறை ஆகியவை குறித்து விளக்கினர்.

இந்நிகழ்வில் மாணவர்கள் கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடிக்கு ஏற்ற வேளாண் இயந்திர வாடகை மையம் அமைத்தல், அதில் அரசு தரும் கடன்கள், மானியங்கள் மற்றும் அதன் பயன்கள் குறித்து உரையாற்றினர். இதில் ஊர்மக்கள் மற்றும் விவசாயிகள் அனைவரும் ஆர்வத்துடன் வந்து பயிற்சி பெற்றனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பனிவரகில் பாரம்பரிய ரகங்களின் ஊட்டசத்து பற்றிய விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது



சேலம், மார்ச் 21

சேலம் மாவட்டம், வேளாண் அறிவியல் நிலையம் சந்தியூர் மற்றும் வேளாண் காலநிலை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை இணைந்து, ஏற்காடு தோட்டக்கலை தகவல் மையத்தில் விவசாயிகளுக்கு பனிவரகில் பாரம்பரிய ரகங்களின் ஊட்டசத்து பற்றிய விழிப்புணர்வு பயிற்சி முகாம் 12.03.25 அன்று நடைபெற்றது.




இதற்கு முனைவர் இரா.ஜெகதாம்பாள், திட்ட ஒருங்கிணைப் பாளர், தலைமை வகித்தார். அவர் பனிவரகு பயிர் சாகுபடி பற்றிய ஆலோசனை கூறினார். முனைவர் செ.கோகிலவானி, உதவி பேராசிரியர், தற்போது உள்ள வாழ்வியல் முறையில் சிறு தானிய பயிரான பனிவரகில் உள்ள ஊட்டச்சத்து பற்றிய முக்கியத்துவம் மற்றும் மதிப்பு கூட்டுதல் பற்றியும் எடுத்துரைத் தார். மேலும் அவர் இந்த திட்டம் ‘கிராண்ட் செலஞ்சு கனடா, நிதி உதவியுடன் செயல்படுகிறது என குறிப்பிட்டார்.

மேலும் தோட்டக்கலை உதவி இயக்குநர் கோவிந்தராஜ் விவசாயிகளுக்கு மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை சந்தைப் படுத்துதல் பற்றி எடுத்துரைத்தார். இதில் ஏற்காடு வட்டாரத்தை சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்.

# உளுந்து விதைப்பண்ணை அமைப்பது குறித்து விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் தகவல்

கன்னியாகுமரி, மார்ச் 21

குமரி மாவட்டத்தில் கும்பப்பூ பருவத்தில் நெல் அறுவடைக்கு பின் நன்செய் தரிசில் உளுந்து பயிர் சாகுபடி செய்வது குறித்து கன்னியாகுமரி மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் மே.ஷீபா, யோசனை தெரிவித்து உள்ளார். குமரி மாவட்டத்தில் உளுந்து பயிரிட விரும்பும் விவசாயிகள், அதனை விதைப்பண்ணையாக பதிவு செய்யலாம்.

நெல் அறுவடைக்குப் பின் அனைத்து விவசாயிகளும் நன்செய் தரிசில் உளுந்து சாகுபடி செய்வதால் குறுகிய காலத்தில் விவாசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைப்பதோடு மண்வளம் அதிகரித்து அடுத்து சாகுபடி செய்யும் பயிர்களிலும் நல்ல விளைச்சல் பெற வாய்ப்பாக இருக்கும். உளுந்து பயிரிட விரும்பும் விவசாயிகள், அதனை விதைப்பண்ணையாகவும் பதிவு செய்யலாம். உளுந்து விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள், ஆதார உளுந்து விதைகள் வாங்கி, விதைப்பண்ணை அமைக்க வேண்டும். விதை வாங்கிய பட்டியல் மற்றும் விதை கொள்கலனில் கோர்க்கப்பட்டிருக்கும் வெள்ளை நிற அட்டை ஆகியவற்றை கவனமாக எடுத்து வைக்க வேண்டும்.

ஆதார விதைகளை, வயலை நன்கு உழுது, வடிகால் வசதிகள் சீராக்கி பின் நிலத்தில் பாவ வேண்டும். பயிர் பூப்பதற்கு 15 நாட்கள் முன்னர் அல்லது விதைத்த 35 நாட்களுக்குள் விதைப்பண்ணையினை SPECS இணைய வழி தளத்தில் பதிவு செய்ய வேண்டும். அதற்கு விதைப்பண்ணை அமைவிடம் குறித்த வரைபடம், விதை வாங்கிய பட்டியல் ஆரார விதை தான் பாவியுள்ளது என்பதற்கான சான்றட்டை ஆகியவற்றுடன் வர வேண்டும். விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையினரால் விதைப்பண்ணை பதிவு செய்யும் போது, உளுந்து விதைபண்ணை பதிவு கட்டணமாக ஒரு விதைப் பண்ணைக்கு ரூ.25/-ம் வயலாய்வு கட்டணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.80/-ம், பயிர் பகுப்பாய்வு கட்டணமாக விதைப்பண்ணை ஒன்றுக்கு

ரூ.80/- ம் வசூல் செய்யப்படும். விதைப்பண்ணை விவசாயிகள் எவ்வளவு ஏக்கர் வேண்டுமானாலும் இந்த முறையில் பதிவு செய்யலாம்.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு நாகர்கோவில், விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் தொடர்பு கொண்டு பயன் பெற கன்னியாகுமரி மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் மே.ஷீபா, தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கிராமப்புற தோட்டக்கலை பணி அனுபவ திட்ட தொடக்கவிழா



கடலூர், மார்ச் 21

கடலூர் மாவட்டம், மேல்புவனகிரி ஒன்றியம், தீத்தாம் பாளையம் கிராமத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக இளமறிவியல் தோட்டக்கலை இறுதியாண்டு மாணவிகள் கிராமப்புற தோட்டக்கலை பணி அனுபவ திட்டத்திற்காக (RHWE Programme) தங்கி உள்ளனர். இதன் தொடக்க விழா தீத்தாம்பாளயம் கிராமத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இதில் கிராமத்தில் பயிரிடப்படும் தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் பயிரிடுவதில் ஏற்படும் சவால்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் மாணவிகள் சார்பாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சி, திட்டத்தின் பொறுப்பாளரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்க துறையின் துணை பேராசிரியருமான முனைவர் எம்.நடராஜனின் வழிகாட்டுதலின் படி நடைபெற்றது. இதில் அண்ணாமலைப் பல்கலைக்கழக தோட்டக்கலைத்துறையின் உதவி பேராசிரியர் முனைவர் ஆர்.சுரேஷ்குமார், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை கருத்தரங்கு




கன்னியாகுமரி, மார்ச் 21

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பயிர் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் இயங்கும் பூச்சிகள் துறை மூலம் வேளாண்மை அறிவியல் நிலையம், திருப்பதிசாரத்தில் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை குறித்த ஒரு நாள் கருத்தரங்கு 20.3.25 அன்று நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சா சுரேஷ் தலைமை உரையாற்றி காய்கறி பயிர்களின் முக்கியத் துவம் மற்றும் சத்துக்களின் வகைகள் குறித்து எடுத்துரைத்து இக்கருத்தரங்கினை துவக்கி வைத்தார். கருத்தரங்கில் தோட்டக்கலை உதவி இயக்குனர் எம்.வி.சரண்யா, தோட்டக் கலை துறையில் காய்கறி பயிர்களுக்கான திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பூச்சி யியல் துறை இணை பேராசிரியர் முனைவர் பி.எஸ்.சண்முகம் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து விரிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை அறிவியல் நிலைய இணை பேராசிரியர் முனைவர் கு.கவிதா காய்கறி பயிர்களில் நோய் மேலாண்மை குறித்து விவரித்தார். வேளாண்மை அறிவியல் நிலைய இணை பேராசிரியர் முனைவர் இரா.லதா கன்னியாகுமரி மாவட்ட நாட்டு காய்கறி வகைகள் குறித்து எடுத்துரைத்தார். இக்கருத்தரங்கில் குமரி மாவட்டத்தை சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இக்கருத்தரங்கில் பயிர் பாதுகாப்பு இடு பொருள்கள் மற்றும் பயிற்சி கையேடுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# லாபகரமான கோழி வளர்ப்பு முறை



சேலம், மார்ச் 21

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் லாபகரமான கோழி வளர்ப்பு குறித்த பண்ணைப்பள்ளி வகுப்பில் கோழிகளுக்கு ஏற்படும் நோய்கள் குறித்த பயிற்சி உத்தம சோழபுரம் கால்நடை மருத்துவ மனையில் நடைபெற்றது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்று இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் பயன்கள் பற்றி எடுத்து கூறினார்.

கோழிகளில் ஏற்படும் வெள்ளைக்கழிச்சல், தொற்று பர்சல் நோய், கோழி அம்மை நோய், காய்ச்சல், கிருமி தொற்று, சளி மற்றும் குடல் புழுக்கள் அறிகுறிகள் பற்றியும் சுத்தம், நோய் எதிர்ப்பு சக்தி, மருத்துகள், தடுப்பு ஊசி மற்றும் மூலிகை மருத்துவம் போன்ற கட்டுப்பாடு முறைகள் குறித்தும் எடுத்து கூறப்பட்டது. கால்நடை உதவி மருத்துவர்கள் பி.ரமேஷ் மற்றும் பி.கண்மணி ஆகியோர் பயிற்சியாளராக கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். 25 விவசாயிகள் 5 குழுக்களாக பிரிந்து பயிற்சி பெற்றனர்.

# தாவர வளர்ச்சி சீராக்கியாக TNAU அமிலத்தின் முக்கியத்துவம்



மதுரை, மார்ச் 21

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய இறுதி ஆண்டு மாணவி ஐஸ்வர்யா கன்மாய்ப்பட்டி கிராமத்தில் மண்ணின் இயற்பியல் பண்புகள், வரிசைப் படுத்துதல் மற்றும் உயிரியல் செயல்பாடுகளில் TNAU அமிலம் பற்றி செயல் விளக்கம் அளித்தார். இதனை பல்வேறு பயிர்களில் NPK உடன் அல்லது இல்லாமல் மண் ஆரோக்கியத்தில் TNAU அமிலத்தின் தாக்கம் மதிப்பிடப்படுகிறது. கனிம உரங்களுடன் சேர்த்து பயன்படுத்தும் போது TNAU அமிலத்தின் செயல்திறன் அதிகரிக்கும். நெல் : 100% பரிந்துரைக்கப்பட்ட NPK + 10 கிலோ TNAU அமிலம் / ஹெக்டேர் அல்லது 10 லிட்டர் தண்ணீரில் 50 மில்லி லிட்டர் ஹுமிக் அமிலம் கலந்து தெளிக்க வேண்டும். இது வெள்ளை வேர்களை அதிகரித்து, அதிகளவில் சதுக்களை எடுக்க வழி செய்கிறது. இது தாவர வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

# உலக சிட்டுக்குருவி தினத்தையொட்டி அவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவிகள்



தஞ்சாவூர், மார்ச் 21

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத்தில் உலக சிட்டுக் குருவி தினம் பற்றிய விழிப்புணர்வு விழா ஆராய்ச்சி நிலைய திட்ட ஒருங் கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திட்ட ஒருங் கிணைப்பாளரோடு தஞ்சை வேளாண் கல்லூரி மாணவிகளும் பங்கேற்றனர். சிட்டுக்குருவி என்பது தானியங்கள், விதைகளை உணவாக கொண்டு வாழும் ஒரு சிறிய, அழகிய பறவை. மனிதர் களுக்கு பல்வேறு நோய்களை ஏற்படுத்தும் கொசுக்களை அழிப்பதில் சிட்டுக்குருவிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. சிட்டுக்குருவிகள், விதைகளை பரப்புவது மற்றும் உணவுச் சங்கிலியிலும் முக்கிய பங்காற்றுகின்றன. இவ்வாறு பல்வேறு வகையில் மனிதனுக்கு உதவும். தொடக்கவுரையை மாணவிகள் நித்யா மற்றும் மதுபாலா வழங்கினர்.

சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை குறைவு மற்றும் அவற்றின் வாழ்விட பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவே, 2010ல் இருந்து ஒவ்வொரு வருடமும் மார்ச் 20 அன்று உலக சிட்டுக்குருவி தினம் நினைவுகூறப்படுகிறது நம்மைச் சுற்றி உள்ள பொதுவான உயிரியற் பல்வகைமை (biodiversity) மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவதற்கும் இந்நாள் நினைவு கூறப்படுகிறது என்பதை நவலேகா எடுத்துரைத்தார்.

அலைபேசிகளின் வருகைக்குப் பின், குருவிகளின் அழிவு மிகவும் அதிகரித்து விட்டன. அலைபேசிக் கோபுரங்களில் இருந்து வெளியேறும் கதிர்வீச்சு, குருவியின் கருவை சிதைக் கிறது. முட்டையிட்டாலும், கருவளர்ச்சி அடையாமல் வீணாகிறது. எரிவாயுக்களில் இருந்து வெளியேறும், மெத்தைல் நைத்திரேட் எனும் வேதியியல் கழிவுப் புகையால், காற்று மாசடைந்து குருவிகளை வாழ வைக்கும் பூச்சி இனங்கள் அழிகின்றன.

எனவே சிட்டுக்குருவிகளுக்கு உணவுப்பற்றாக்குறை ஏற்படுகிறது. வீட்டுத் தோட்டங்கள், வயல்களில் பயிர்களுக்கு பூச்சிக் கொல்லி தெளித்து, பூச்சிகள் கொல்லப்படுகின்ற காரணத்தினால் உணவு இல்லாமல் குருவிகள் அழிகின்றன. மரங்கள் வெட்டப்படுவதாலும், மனித இனத்தின் அசுர தொழில்நுட்ப வளர்ச்சியாலும் சிட்டுக்குருவிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப் படுகிறது என அவற்றின் அழிவின் அபாயத்தை மாணவிகள் லெக்ஷ்மி, மகாசுவேதா மற்றும் மோகனப்பிரியா விளக்கினர்.

செடிகள் நிறைய நட்டுவைப்பதுடன், கூடு கட்ட உதவும் கூடு பெட்டிகளை பொருத்துவதன் மூலம் வாழிடம் தேடி அலையும் சிட்டுக்குருவிகளுக்கு பெரும் உதவியாக அமையும்.

செல்போன் உபயோகத்தை குறைத்து, கதிர்வீச்சின் அளவை குறைப்பதன் மூலம் நாம் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். தண்ணீர், விதைகள் போன்ற உணவு பொருட்களை வைத்தும் உணவு பற்றாக்குறையை தடுக்கலாம். ஒரு கனசதுர அமைப்பிலான அட்டைப்பெட்டியின் நடுவில் ஓட்டை போட்டு தொங்கவிட்டால் அது சிட்டுக்குருவிகள் வந்து தங்கும் கூடாக அமையும். இதுபோன்ற காக்கும் வழிகளை பற்றி மாணவிகள் மலரினி, மதிவர்ஷினி மற்றும் மகாலட்சுமி விவரித்தனர்.

இதுபோன்ற நாட்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் பள்ளி மாணவர்களிடையே, பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, இயற்கைக்கு அக்கறை செலுத்தி அழிந்து வரும் உயிரினங்களை நாம் காப்பாற்ற முற்படலாம். நம் நலனை மட்டும் பாராமல், நம்மை வாழ வைக்கும் இயற்கையின் ஒவ்வொரு படைப்பிற்கும் தீங்கிழைக்காமல் பாத்துகாப்போம்.

'கதிர்வீச்சை குறைப்போம்! உயிர்களை உயர்த்துவோம்!' என கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்தார் மாணவி நந்தினி.



# வெங்காய அறுவடை பணியில் கோவை வேளாண் பல்கைக்கழக மாணவர்கள்



கோயம்புத்தூர், மார்ச் 21

கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவம் குறித்து திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு மாவட்டங்களுக்கு 65 நாள் விவசாயிகளுடன் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு 4.3.25 அன்று சென்றனர்.




கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்கள் தற்போது உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் ஊரக வேளாண் பணி அனுபவம் திட்டத்தின் மூலம் பல்வேறு வேளாண் சார்ந்த பணிகளை செய்து வருகின்றனர். அத்திட்டத்தின் ஒரு பகுதியாக உடுமலைப்பேட்டை வட்டாரம் பெரிய வாளவாடி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பாலகுருசாமி வயலில் ஐந்து ஏக்கர் பரப்பளவில் வெங்காயம் நடவு செய்திருந்தார். அவர் அறுவடை செய்து கொண்டிருந்த போது வேளாண் மாணவர்கள் அறுவடையில் பங்கேற்ற விவசாயி களுடன் சேர்ந்து அறுவடை செய்து தூற்றி பாரம்பரிய முறைப்படி கிட்டி அமைத்து வெங்காயத்தை சேமித்து வைத்தனர்.

இதில் வேளாண் மாணவர்களான மணிமாறன், தமிழ்மாறன், ஆனந்த கிருஷ்ணன், கோபாலகிருஷ்ணன், கார்த்திக், கண்ண தாசன், முகமது ரபீக், ராஜு, ரஞ்சித் குமார், சுந்தரேசன், ஸ்ரீபதி ஆகியோர் பங்கேற்றனர்.

# பட்டுப்புழு வளர்ப்பு குறித்து பயிற்சி பெற்ற வேளாண் கல்லூரி மாணவர்கள்



சிவகங்கை, மார்ச் 21

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், செட்டிநாட்டில் பயிலும் இறுதி ஆண்டு மாணவிகளான மு.பூஜாபா. பிரியா, பா.பிரவீனா, ஹ.ராஜநிவேதா, கி.ரம்யா–ாகிருஷ்ணன், ந.ரித்திகா, மா.சந்தியா, ச.சரண்யா, ப.சாலினி, ம.சிவானி ஆகியோர் வேளாண்மை கிராமப்புற விவசாய






அனுபவ பணி திட்டத்தின் கீழ், சிங்கம்புணரி வட்டத்தில், காளாப்பூர் கிராமத்தில் பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் மல்பெரி சாகுபடி குறித்த விளக்கத்தை விவசாயி ராம்குமார் (பாரம்பரிய இயற்கை வேளாண்மை குழு தலைவர்) வேளாண் மாணவர்கள் பயிற்சி பெற்றனர். மேலும் மல்பெரி தோட்டம் மற்றும் பட்டு புழு வளர்ப்பு இடத்திற்கு அழைத்துச் சென்று விரிவாக விளக்கம் அளித்தார். மல்பரி சாகுபடி தொழில்நுட்பம், நீர் பாசனம், உரங்கள் மற்றும் பூச்சி மேலாண்மை குறித்து தெளிவாக கூறினார்.

அதுமட்டுமின்றி பட்டுப்புழு கலப்பினங்கள், இளம்புழு வளர்ப்பு, அதன் சாதனங்கள், முட்டை பரப்புக்கான முன்னேற் பாடுகள் மற்றும் அதனை பாதுகாக்கும் முறை, முட்டை பொறிப்பு, முட்டை களில் இருந்து புழுக்களை பிரித்தல், புழு வளர்ப்புத் தாங்கிகள், புழுவுக்கு உணவளித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் பயிற்சியினை மாணவர்களுக்கு அளித்தார்.

# மல்லிகை செடியில் பூச்சியை நீக்கும் முறை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தி வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, மார்ச் 21

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி அருகே குட்லாடம்பட்டி கிராமத்தில் மல்லிகை செடியில் இலைப்பேன் மற்றும் அசுவினி பூச்சியை நீல ஒட்டும் பொறியைப் பயன்படுத்தி நீக்கும் செயல் முறை விளக்கம் குறித்து மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவி ம.கிருஷ்ணவேணி ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ப்ளூ ஸ்டிக்கி ட்ராப் என்று அழைக்கப்படும் நீல ஒட்டும் பொறியைக் கொண்டு மல்லிகையில் இலைப்பேன் மற்றும் அசுவினி பூச்சியை நீக்கலாமென்றும் அதைப் பயன்படுத்தும் முறையைப் பற்றியும் விவசாயிகளுக்கும் பொதுமக்கள் அனைவருக்கும் விளக்கம் அளித்தார்.

நீல ஒட்டும் பொறிகள் பூச்சிக் கட்டுப்பாட்டுக்கான நச்சுத் தன்மையற்ற முறையாகும். இது ரசாயன பூச்சிக்கொல்லிகளை விட பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக அமைகிறது.

# பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு நடத்திய வேளாண்மை மாணவிகள்



திருச்சி, மார்ச் 21

திருச்சி மாவட்டம், சமயபுரத்தில் செயல்பட்டு வரும் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவிகள் ஊரக வேளாண் பணி அனுப்ப திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக உறக்கரை பஞ்சாய அலுவலகத்தின் முன் 'பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு' எனும் முறையை கொண்டு உறக்கறை கிராமத்தின் வளங்களை கண்டறிந்தனர். இப்பணியை பஞ்சாயத்து அலுவலகர் உதவியோடும் பொதுமக்கள் உதவியோடும் சிறப்பான முறையில் கிராமத்தின் வளங்களை வண்ணப்பொடிகள் கொண்டு வரைபடமாக வரைந்தனர். இதனை ஏராளமான விவசாயிகள் மற்றும் பொது மக்கள் கண்டு ரசித்தார்கள்.